Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**STC.No. 494/2024**

**Deposition of PW.8 (LW.12)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாண்டியராஜன் | ஜாதி | : | |
| த/பெ | : | பேச்சிமுத்து | தொழில் | : | சார்பு ஆய்வாளர், |
| கிராமம் | : | சித்தரேவு | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.05.2026.

(எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு இம்மனு அனுமதிக்கப்படுகிறது )

**முதல் விசாரணை**

நான் தற்போது சாமிநாதபுர காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.இதற்கு முன்பு நான் செம்பட்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது 10.10.2023 ஆம் தேதி சார்பு ஆய்வாளர் ஜெயசேகர் என்பவர் பணியில் இருந்த போது திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று , அங்கு உள்நோயாளியாக இருந்த நடுப்பட்டியை சேர்ந்த பிரபாகரன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்று செம்பட்டி காவல் நிலைய குற்ற எண்.325/2023- என்ற எண்ணில் இதச சட்டப்பிரிவுகள் 279,337 என்று வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். அந்த முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.3/Pw.8) குறியீடு செய்யப்படுகிறது.

அன்றைய தினமே 13.00 மணிக்கு சம்பவ இடம் செய்து பார்வை மகஜர், மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே (அ.சா.ஆ.4/Pw.8) மற்றும் (அ.சா.ஆ.5/Pw.8) ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பார்வை மகசர் சாட்சிகளான சூர்யா, காசிராஜன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகள் குணசுந்தரி, நாகராஜ், ஜெயகுமார் , நாட்ராயன் , கௌதம் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்னர் 11.10.2023 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு நிலையத்தில் ஆஜரான இவ்வழக்கின் எதிரி சின்னச்சாமி என்பவரை கைது செய்து நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டார். பின்னர் 11.10.2023 ஆம் தேதி எதிரி ஓட்டி வந்த வாகனம் TN 01 AN 1089 பேருந்தை மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி வைத்துள்ளார். பின்னர் பணி மாறுதலில் சென்று விட்டார். பின்னர் நான் இந்த வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 11.01.2024 ஆம் தேதி இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட TN 57 BH 8029 என்ற எண் கொண்ட Shine என்ற இருசக்கர வாகனத்தை திண்டுக்கல் மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி வைத்தேன்.அந்த மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கைகள் முறையே (அ.சா.ஆ.6/Pw.8) மற்றும் (அ.சா.ஆ.7/Pw.8)ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட பிரபாகரனுக்கு சிகிச்சையளித்த மருத்துவர் திரு.தீபக் சங்கர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெறப்பட்டது. அந்த காயச்சான்றிதழ் (அ.சா.ஆ.8/Pw.8) ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று காயச்சான்றிதழ் மூலம் தெரிய வந்ததால் இவ்வழக்கின் சட்டப்பிரிவை 279,337 இதச விலிருந்து சட்டப்பிரிவு 279,338 இதச என்று சட்ட மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன். அந்த சட்ட மாறுதல் அறிக்கை (அ.சா.ஆ.9/Pw.8) ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு இவ்வழக்கின் முதல் விசாரணை அதிகாரி திரு. ஜெயசேகர் சார்பு ஆய்வாளர் அவர்களை விசாரணை செய்து 22.01.2024 ஆம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

காயம்பட்டவரிடமிருந்து எத்தனை மணிக்கு வாக்குமூலம் பெறப்பட்டது என்று முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.புகார் வாக்குமூலத்தினை யார் எழுதினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அது பற்றி எனக்கு தெரியாது. இது எனக்கு முன்பாக இருந்த சார்பு ஆய்வாளர் பதிவு செய்த புகார் வாக்குமூலம் ஆகும். காயச்சான்றின் அடிப்படையில் தான் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் காயச்சான்றிதழ் பெற்று மீண்டும் மருத்துவ கருத்துரை பெறப் பெற்று தான் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. உங்களுடைய இறுதி அறிக்கையில் மதுரை அரசு மருத்துவமனையில் பெறப்பட்ட கருத்துரை எதுவும் தாக்கல்

செய்யப்படவில்லை என்றால்  சரிதான். செம்பட்டி ரவுண்டானா போக்குவரத்து மிகுதியாக உள்ள பகுதி என்றால் சரிதான். அந்த இடத்தில் வாகனங்கள் அதிக வேகமாக செல்லமுடியாது என்றால் சரிதான் . விபத்து நடந்த இடம் ரவுண்டானாவில் இருந்து 100 மீட்டர் தொலைவில் தான் இருக்கும் என்றால் இல்லை அதற்கும் அதிகமாக தான் இருக்கும்.

விபத்து நடந்த இடத்தில் வாகனம் வேகமாக செல்ல வாய்ப்பில்லை என்றால் போக்குவரத்து நெரிசல் இருந்தால் மட்டு்மே வாகனம் வேகமாக செல்ல முடியாது இல்லையென்றால் வாகனம் வேகமாக செல்லலாம். எதிரியிடம் இருந்து புகார் வாக்குமூலம் பெற்ற பின்பு  பாக்கிய மீனா மருத்துவமனையில் உள்ள CCTV காமிராக்களை இவ்வழக்கில் ஒரு சாட்சியமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கிற்காக நிலையத்தில் வைத்து சாட்சிகளை தயார் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் சொல்வது போல் வாகனம் வேகமாக செல்லமுடியாது என்றும், புகார்தாரர் அவராகவே வந்து பேருந்தில் மோதி விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. வழக்கின் எதிரி விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல. சிசிடிவி காமிரா காட்சிகளை சேகரிக்காததற்கு காரணம் எதிரிக்கு சாதகம் ஏற்படும் என்பதால் தான் என்றால் சரியல்ல. காயம்பட்ட நபருக்கு இழப்பீடு பெற்றுத்தர வேண்டும் என்ற எண்ணத்தில் முறையாக விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. விபத்தில் பாதிக்கப்பட்ட நபர் வாகனத்தினை இயக்குவதற்கு முறையான லைசென்ஸ் பெற்றுள்ளாரா என்று ஆய்வு செய்யவில்லை என்றால் சரியல்ல, அவர் தாக்கல் செய்யவில்லை.

மோட்டார் வாகன ஆய்வாளர் கூறியுள்ள தகவலில், TN 57 BH 8057 Honda Shine மோட்டார் சைக்கிள் பற்றி குறிப்பிடும் போது அதில் ஒரு குறிப்பிட்ட செலான் எண்ணை குறிப்பிட்டும் 11.01.2024 என்ற தேதியில் குறிப்பிடப்பட்டுள்ளதை நீங்கள் விசாரித்தீர்களா என்றால் இல்லை. 7 ஆம் பத்தியில் இ-செலான் தொகை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.விபத்தில் சம்மந்தப்பட்ட பேருந்தை பற்றி கூறும் போது ஹெட் லைட் மற்றும் வலது பக்க முகப்பு விளக்கு மட்டும் தான் சேதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

உங்களிடம் காட்டப்படும் மாதிரி வரைபடத்தில் ரோட்டின் நடுப்பகுதியில் உள்ள வெள்ளைக் கோட்டின் அருகில் தான் விபத்து நடைபெற்றது என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**Sd/–Thiru. S. Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor